Previous Date of examination : 07.06.2022

## நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

## திருவாரூர்

# CC No.63/2018

2023-ம் ஆண்டு மார்ச் மாதம் 07 -ம் நாள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சி அ..சா.9 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தினேஷ் | வயது | 30 /2023 |
| தகப்பனார் பெயர் | சேகர் | ஜாதி | |
| தொழில் | தனியார் வேலை | மதம் | |
| ஊர் | மணவெளி | தாலுக்கா | |

( 3 வது எதிரி ஆஜர், 1, 2 வது எதிரிகள் ஆஜரில்லலை. கு.வி.மு.ச.பிரிவு 317-ன் கீழ் மனுதாக்கல்செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :

**(1)** நான் தற்போது மணவெளியில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். ஓவரூர் காரத்தி என்பவரை நேரிடியாக தெரியாது. அவர்இவ்வழக்கின் புகாரை கொடுத்த விபரம் தெரியும். எனக்கு ஆஜரில் உள்ள முருகானந்தத்தை தெரியாது. ஆஜரில்லாத எதிரி செந்தில்நாதனை தெரியும். ஆஜரில்லாத எதிரி சையது சுல்தானை தெரியாது. சாட்சி வெங்கடசுப்பிரமணியன் எனக்கு தெரியும். 2015 ம் வருடம் எனது நண்பரான வெங்கடசுப்பிரமணியன் செந்தில் நாதனிடம் துபாய் செல்வதற்கு ரூ.75 ஆயிரம் கொடுத்துள்ளதாக சொன்னார். நானும் வெளிநாட்டுக்கு வேலைக்கு போகும் எண்ணம் இருந்ததால் வெங்கடசுப்பிரமணியனிடம் சொன்னேன், பின்னர் செந்தில்நாதன் வெங்கடசுப்பிரமணியன் வீட்டிற்கு வந்தார். நாங்கள் பேசி செந்தில்நாதனிடம் ரூ.55 ஆயிரத்தை வெங்கடசுப்பிரமணியன் வீட்டில் வைத்து எனது மாமா அருண்பிரபு, வெங்கடசுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் செந்தில் நாதனிடம் 2015 செப்டம்பர் 18 ம் தேதி கொடுத்தேன்.

**(2)** மொத்தம் ரூ.75 ஆயிரம் ஆகும் என சொன்னார். அதன் பிறகு அக்டோபர் 4 ம் தேதி செந்தில்நாதன் வெங்கடசுப்பிரமணியன் வீட்டிற்கு வந்தார். எனது பெயர் போட்டு விசா ஒன்றை காட்டினார். அந்த விசாவை நம்பி மீதம் கொடுக்கவேண்டிய பணம் ரூ.20 ஆயிரத்தை செந்தில்நாதனின்இந்தியன் வங்கி கணக்கு எண்.962810308 என்ற வங்கி கணக்கில்

செலுத்தினேன். தீபாவளி முடிந்தவுடன் நீங்கள் வெளிநாடு சென்றுவிடலாம் என செந்தில்நாதன் சொன்னார். பின்னர் நவம்பர் 3ம் தேதி நான் தொடர்புகொண்டபோது செந்தில்நாதன் செல்போன் சுவிட்ச் ஆப் என வந்தது. அதன் பிறகு வெங்கடசுப்பிரமணியனை தொடர்பு கொண்டேன். அவரும் செந்தில்நாதனுக்கு போன் செய்து பார்த்துவிட்டு சுவிட்ச் ஆப் என சொன்னார். அதன் பிறகுதான் செந்தில்நாதன் வேலை வாங்கி தருவதாக கூறி ஏமாற்றி எங்களிடம் பணம் வாங்கிய விபரம் தெரியவந்தது. அதன் பிறகு திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் புகார் கொடுக்க வந்தோம். நடவடிக்கை எடுப்பதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணமானது செந்தில்நாதனால் சேவகன் என குறிப்பிட்டு எனக்கு அனுப்பப்பட்டதாகும். அதில் எனது பாஸ்போர்ட்டும், கடிதமும் இருந்தது. ( **கடிதம் அ.சா.ஆ.16 ஆகவும் , அஞ்சல் உறை அ.சா.ஆ.17 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**).

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

(1) செந்தில்நாதன் எனது மாமா அருள்பிரபுவிற்கு நண்பரா? என்றால் இல்லை. செந்தில்நாதனை எனக்கு வெங்கடசுப்பிரமணியன் மூலம் தெரியும். நான் செந்தில்நாதனின் மீது கொடுத்த புகாரை எஸ்.பி. அலுவலகத்தில் வாங்கிக்கொண்டார்களா? என்றால் வாங்கிக்கொண்டார்கள். ஏற்கனவே கார்த்திக் என்பவர் புகார் கொடுத்திருப்பதால் என்னை சாட்சியாக சேர்த்துள்ளதாக சொன்னார்கள் என்றால் சரிதான். எதிரி செந்தில்நாதன் வங்கி கணக்கில் பணம்போட்டதாக சொல்லும் வங்கி செலானின் கவுண்டர் பைலை நான் போலிசாரிடம் கொடுத்தேனா ? என்றால் கொடுக்கவில்லை. நான் சொல்வது போல செந்தில்நாதனின் வங்கி கணக்கில் பணம் எதுவும் செலுத்தவில்லை என்றும், அதனால்தான் அந்த ஆவணத்தை போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

(2) எனது மாமா அருள்பிரபுவை போலிசார் சாட்சியாக விசாரித்தார்கள் என்றால் இல்லை. நான் சொல்வது போல் அருள்பிரபு முன்னிலையில் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றும், அதனால்தான் போலிசார் அவரை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.17 அஞ்சல்உறையில் அனுப்புனர் முகவரி சேவகன் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.16 கடிதத்தில் உள்ள கையொப்பம் யாரால் செய்யப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான்சொந்தில்நாதனின் கையெழுத்து ஏற்கனவே பார்த்துள்ளேன். அந்த கடித்தில் உள்ள கையெழுத்து செந்தில்நாதனுடையதுதான். அ.சா.ஆ.16 கடிதத்தில் எதிரியின் பெயர் என குறிப்பிட்டு சேவகன் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கடிதத்தில் எந்த தேதியில் எந்த கொரியர் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

(3) அ.சா.ஆ.16 மற்றும் அ.சா.ஆ.17 ஆவணங்கள் காவல் துறையினரால் பின்னிட்டு ஜோடிக்கப்பட்ட ஆவணம் என்றும்,அதற்கும் செந்தில்நாதனுக்கும் சம்பந்தம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. போலிசார் சேவகன் என்ற நபரை சந்தேக எதிரியாக அழைத்து வந்து விசாரித்த விபரம் தெரியுமா? என்றால் சரியல்ல.

**2, 3 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

இல்லை என தெரிவிக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டது.

**மறுவிசாரணை** - இல்லை.

ஒம்/- எல். ரகுபதிராஜா,

நீதித்துறை நடுவர்,

திருவாரூர்.